**சுருக்கம்**

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை – முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் –மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 15–09–2022 அன்று திட்டம் தொடங்கப்பட்டது – தொடக்க நாள் நிகழ்ச்சி நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டதற்கான செலவினம் – நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்படுகிறது.

---

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் **(சந4–1)** துறை

அரசாணை (ப) எண். 25

நாள். 13.02.2023
திருவள்ளுவர்ஆண்டு 2054
சுபகிருது மாசி 1

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண்.43, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந.4–1) துறை, நாள் 27.07.2022.

2. சமூக நல இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.17570/ சஉதி(2)/2022 நாள் 10.09.2022 மற்றும் 13.09.2022 26.10.2022

3. இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, மற்றும் அலுவலால் அரசு துணைச் செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி விளம்பரத் துறை அவர்களின் கடித ந.க.எண்.16859/விளம்பரம்/2022, நாள். 12.10.2022 (சமூக நல இயக்குநருக்கு முகவரியிடப்பட்டது).

ஆணை:–

தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் பயிலும், ஏழை மாணவர்களின் படிப்பினை ஊக்குவிக்கவும், ஊட்டச்சத்துக் குறைபாட்டினை போக்கவும், கற்றல் இடைநிற்றலைத் தவிர்க்கவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ், சில மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் தொலைதூர கிராமங்களில் உள்ள அரசு தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ /மாணவியருக்கு முதற்கட்டமாக அனைத்துப் பள்ளி வேலை நாட்களிலும் காலை வேளைகளில் சத்தான சிற்றுண்டி வழங்கப்படும் என்று வெளியிடப்பட்ட அறிவிப்பினை தொடர்ந்து, நாட்டிலேயே முன்னோடியாக முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை செயல்படுத்த மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டது.

2. சமூக நல இயக்குநர் அவர்கள், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் மதுரை மாநகராட்சி ஆதிமூலம் ஆரம்பப் பள்ளி கீழ் அண்ணா தோப்பு மதுரையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 15.09.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டது என்றும் இது தொடர்பாக 15.09.2022 அன்று நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டது என்றும் 16.09.2022 அன்று அனைத்து மாவட்டங்களிலும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் இத்திட்ட தொடக்க விழாவில் கலந்து கொண்டது குறித்து 16.09.2022 அன்று நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டது என்றும் மேற்படி திட்டத்தை

அனைத்து மாவட்டங்களிலும் தொடங்கப்பட்டுள்ளது குறித்து 18.09.2022 அன்று நாளிதழ்களில் விளம்பரம் வெளியிடப்பட்டது என்றும் தெரிவித்து அதற்கான பின்வரும் பட்டியல்களை அரசுக்கு அனுப்பியுள்ளார் :-

| வ.எண் | விளம்பர நிறுவனத்தின் பெயர் | விளம்பரம் வெளியிடப்பட்ட நாள் | தொகை (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | திருவாளர்.சாரி அட்வர்டைசிங், சென்னை | 15.09.2022 | 2600483.00 |
| 2 | திருவாளர்.விப்ராஸ் ஆட்ஸ், சென்னை | 15.09.2022 | 2297295.00 |
| **மொத்தம்** | | | **4897778.00** |
| 3 | திருவாளர்.விப்ராஸ் ஆட்ஸ், சென்னை | 16.09.2022 | 2117115.00 |
| 4 | திருவாளர் பிரைட் அட்வர்டைசிங், சென்னை | 16.09.2022 | 1340956.00 |
| **மொத்தம்** | | | **3458071.00** |
| 5 | திருவாளர் சுதா ஆட்ஸ், சென்னை | 18.09.2022 | 566528.00 |
| 6 | திருவாளர் எம்.சி.எஸ் கம்யூனிகேஷன்ஸ பிரைவேட் லிமிடெட், சென்னை | 18.09.2022 | 263340.00 |
| 7 | திருவாளர் சிரெஷ்டா கம்யூனிகேஷன்ஸ், சென்னை | 18.09.2022 | 429660.00 |
| 8 | திருவாளர்.விப்ராஸ் ஆட்ஸ் சென்னை | 18.09.2022 | 211365.00 |
| 9 | திருவாளர் பிரைட் அட்வர்டைசிங், சென்னை | 18.09.2022 | 429660.00 |
| 10 | திருவாளர் என்த்ரால் கம்யூனிகேஷன்ஸ், சென்னை | 18.09.2022 | 459113.00 |
| 11 | திருவாளர் எலிகண்ட் பப்ளிசிட்டீஸ், சென்னை | 18.09.2022 | 183645.00 |
| 12 | திருவாளர் நைடஸ் அட்வர்டைசிங், அண்டு மார்கெட்டிங் பிரைவேட் லிமிடெட், சென்னை | 18.09.2022 | 1611225.00 |
| **மொத்தம்** | | | **4154536.00** |

தொகுப்பு

| வ. எண் | விளம்பரம் | நாள் | தொகை (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட தொடக்க விழா | 15.09.2022 | 48,97,778.00 |
| 2 | முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பங்கேற்பு | 16.09.2022 | 34,58,071.00 |
| 3 | அனைத்து மாவட்டங்களில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் | 18.09.2022 | 41,54,536.00 |
| மொத்தம் | | | 1,25,10,385.00 |

3. மேலும், இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை அவர்கள் மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத் தொடக்க விழா தொடர்பான அரைப் பக்க வண்ண விளம்பரம் தயார் செய்யப்பட்டு அரசு அங்கீகாரப்பட்டியலில், உள்ள விளம்பர நிறுவனங்கள் மூலமாக அரைப்பக்க வண்ண விளம்பரம் நாளிதழ்களில் வெளியிட்ட வகையில் ரூ.1,25,10,385/–க்கான பட்டியலை நேர் செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

4. சமூக நல இயக்குநர் அவர்கள் முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட தொடக்க விழா நிகழ்ச்சியினை செய்தித்தாள்களில் விளம்பரப்படுத்தியமைக்கான விளம்பர செலவினத் தொகையாக ரூ.1,25,10,385/– ஒப்பளிப்பு செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

5. சமூக நல இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து அதனை ஏற்று முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத் தொடக்க விழாவினை தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் விளம்பரம் செய்ததற்காக மேலே பத்தி 2இல் குறிப்பிட்டுள்ள பட்டியல்களை நேர்செய்யும் பொருட்டு வருமானவரி மற்றும் பட்டியல் தொகையில் 1% பத்திரிக்கையாளர்கள் நல வாரியத்திற்கு பிடித்தம் செய்யப்படவேண்டும் எனும் நிபந்தனைக்கு உட்பட்டு ரூ.1,25,10,385/– (ரூபாய் ஒரு கோடியே இருபத்தைந்து இலட்சத்து பத்தாயிரத்து முந்நூற்று எண்பத்தைந்து மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5இல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படவேண்டும் :–

"2235–சமூகப் பாதுகாப்பும் நலனும் 02 சமூக நலன் 001 நெறிப்படுத்தலும் நிருவாகமும்–மாநிலச் செலவினங்கள் – AA–சமூக நல இயக்ககம்–308–விளம்பரமும் பிரச்சாரமும் 01– விளம்பரக் கட்டணங்கள்

(IFHRMS DPC: 2235–02–001–AA–308–01)"

7. மேலே பத்தி 5இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.1,25,10,385/– 2022–2023 ஆம் ஆண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினம் 2022–2023 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சிறப்பு நிகழ்வாக கொணர்ந்து சட்ட மன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 5இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட சமூக நல இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 5இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை 2022–2023 ஆம் ஆண்டிற்கான துணை

மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் 2022-2023 ஆம் ஆண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதித் (சந/வ.செ.பொ-I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு சமூக நல இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். 5795/2023 நாள். 13.02.2023-ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது (இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.2448 (இரண்டாயிரத்து நானூற்று நாற்பத்தி எட்டு)) (IFHRMS ASL No.2023022448)

(ஆளுநரின் ஆணைப்படி)

சுன்சோங்கம் ஜடக் சிரு
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
சமூக நல இயக்குநர், சென்னை.15.
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அரசு துணைச் செயலாளர்,
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் (விளம்பரம்) துறை, சென்னை.9.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை.35
மாநில கணக்காயர், சென்னை.18.

நகல்
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை-9
நிதித் (சந/வ.செ பொது I-II /வவ.I) துறை, சென்னை-9.
முதன்மைச் செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர், சென்னை-9.
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந6/அநமு) துறை,
சென்னை-9
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படிஅனுப்பப்படுகிறது//

16/2/2023
அரசு சார்பு செயலாளர்
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை
தலைமைச் செயலகம், சென்னை-600 009

Gnny 16-2-2023
2/2